1972 பிபரவரி 1]

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவர் அவர்களே, இப்போது இந்த மாவட்டமானது இரண்டாகப் பிரிக்கப்பட்டிருக்கும் நிலையில், இதையாவது இரண்டாகப் பிரிக்க அட்மினிஸ்ட்ரேஷன் ரீஃபார்ம் கமிஷனுக்கு ஆலோசனைக்கு அனுப்பப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, இல்லை.

ஈரோட்டில் தையல் பூ வேலை செய்யும் நிலையம்

* 235 வினு—திரு. கே. என். குமாரசாமி : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்டம், ஈரோடு, பவானி துணிகளுக்குப் பெரிய மார்க்கெட்டாக இருப்பதால் அங்கு மிஷின் மூலம் எம்ப்ராய்டரி செய்கின்ற (மிஷின் மூலம் பின்னுகின்ற) தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இல்லை.

பல்லடத்திற்கு சுருட்டுத் தொழிற்சாலை

* 235 வினு—திரு. கே. என். குமாரசாமி : மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

பல்லடத்தில் அரசாங்கத்தின் மூலம் சுருட்டுத் தொழிற்சாலை ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசு பரிசிலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

Ground Water Project

* 237 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the Hon. the Minister held discussion in January 1968 with the U.N. Mission on matters relating to the second phase of the U.N. Ground Water Project; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) இந்தப் பேச்சுவார்த்தையின் பொழுது குழு, ஒருசில குறிப்புகள் மீது எழுத்து மூலமாக விளக்கம் கேட்டது. விளக்கம் வேண்டப்பட்ட குறிப்புகளும் அவற்றுக்கு அளிக்கப்பட்ட பதிலும், அவைமுன் வைக்கப்பட்ட அறிக்கையில் @ கொடுக்கப்பட்டு உள்ளது. இரண்டாம் நிலைத் திட்டம் பற்றிய விவரங்களும் அவை முன் வைக்கப்பட்டுள்ள அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ளன.

@ 678–693ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.